**லுனுகம்வெஹெர பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜூன் 07 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து லுனுகம்வெஹெர பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2014 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை குப்பை முகாமைத்துவ நிலையத்தினால் வருடாந்தம் பல்வேறு அனுமதிப்பத்திரங்கள் பெறுவதற்காக செலுத்தியிருந்த ரூபா 221,400 தொகை சொத்துக்கள் என மூலதனப்படுத்தியிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது திண்மக் கழிவுப் பொருள் மத்திய நிலையத்தில் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 374,525 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மூலதனப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | 2016 ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வாகன தரிப்பிடத்தின் கிரயம் ரூபா 906,005 தொகையினை மூலதனப்படுத்தியிருக்க வில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மூலதனப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் போது இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தில் இருந்து நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 63,000 தொகைக்கான தண்ணீர் மோட்டாரினை மூலதனப்படுத்தி இருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மூலதனப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | பிரதேச சபைக்கு சொந்தமான JCB இயந்திரத்தின் பெறுமதியினை மூலதனப் படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து மூலதனப் படுத்துகிறேன். |
| (vi) | மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 374,000 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்கான வருமானம் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2018 இரண்டாம் காலாண்டிற் கான முத்திரைக் கட்டண அட்டவணை 2019.04.30 திகதி கிடைத்ததினால் கணக்கு களுக்கு எடுக்கப்படவில்லை. |

**(ஆ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமை யினால் கூட்டுத்தொகை ரூபா 6,908,020 தொகைக்கான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதிருந்தது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை பேணப்பட்டிருக்க வில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து முரண்களுக்கான காரணங்களை காட்டும் கூற்று தயாரித்து சமரப்பிக்கின்றேன். |
| (ஆ) 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணினிகள் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 542,256 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 676,811 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2018 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 351,000 | 407,739 | 412,239 | 2,500 | 332,500 | 327,985 | 320,958 | 7,000 |
| வாடகை | 4,332,000 | 3,137,025 | 3,139,550 | 120,900 | 2,876,600 | 3,353,360 | 3,233,935 | 123,425 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 505,100 | 1,596,200 | 1,565,000 | 55,200 | 339,900 | 763,230 | 733,880 | 24,000 |
| ஏனைய வருமானங்கள் | 2,424,000 | 1,763,183 | 1,348,596 | 1,007,922 | 4,652,200 | 2,639,815 | 3,163,325 | 593,335 |
| மொத்தம் | 7,612,100 | 6,904,147 | 6,465,385 | 1,186,522 | 8,201,200 | 7,084,390 | 7,452,098 | 747,760 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய ஒட்டுமொத்த வருமானம் ரூபா 7,651,907 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 6,465,385 தொகையாகக் காணப்பட்டமையால் வருமானம் சேகரிக்கும் முன்னேற்றம் 84 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | கணக்காய்வு பந்தியை ஏற்றுக் கொள்கிறேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் தொடர்பாக வீதவரி அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் வர்த்தமானியில் பிரசுரித்து ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டது. |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பெற வேண்டிய கடை வாடகை ரூபா 120,900 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடை வாடகை அறவீடு செய்ய வேண்டும். | ரூபா 68,900 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மீதித் தொகையினை செலுத்துமாறு கடை உரிமையாளர்களுக்கு அறிவித்திருந்ததுடன் பணம் செலுத்தாத கடை உரிமையாளர்களின் கடைகளை உரித்தாக்குவதற்கு 2019 மே 24 திகதி சபை தீர்மானித்திருந்தது. |

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கிடைக்க வேண்டிய அனுமதிப்பத்திர கட்டணம் ரூபா 55,200 தொகை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை அனுமதிப்பத்திர அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 11,800 தொகை அறவீடு செய்திருந்ததுடன் மீதித் தொகை யில் ரூபா 40,000 தொகையான அறிவித்தல் பலகை கட்டணம் செலுத்துமாறு உரிய நிறுவனங்க ளுக்கு அறிவித்திருந்ததுடன் ரூபா 3,400 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்கு வருமானப் பரிசோதகருக்கு அறிவுரை வழங்கினேன் |

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 605,422 தொகை மற்றும் ரூபா 402,500 தொகை ஆகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 405,422 தொகை கிடைத்திருந்ததுடன், முத்திரைக் கட்டணத்திற்கான அட்டவணை கிடைத்திருக்க வில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 126 இன் கீழ் 30 பிரதான விடயங்கள் நிறைவேற்று வதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 திகதி வரை 02 விடயங்களுக்கு மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தது. | துணை விதிகள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 28 விடயங்களில் துணை விதிகளைத் தழுவியிருத்தல் மேற்கொள்ளப்பட்டது. |

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபி விருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவை செய்வதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளக்க வேண்டும். | நீண்ட காலத் திட்டங்கள் தயாரிப்பதற்காக நடவடிக்கை என எடுப்பதாகவும், குறைந்த வருமானம் பெறும் சபை ஒன்று ஆதலால் அபிவிருத்தி இலக்குகளை நோக்கி செல்லும் சிக்கல்கள் காணப்பட்டன. |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 13 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 01 மிகைப் பதவியணி முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி மிகைப் பதவிகளை முறைப் படுத்துதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். | மிகை ஊழியர்களை முறைப் படுத்துவதற்காக நி.பி.71 படிவம் அனுப்பப்பட்டிருந்ததுடன் தொழிநுட்ப உத்தியோகத்தர், வருமானப் பரிசோதகர்கள் வெற்றிடங்களை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மூலம் நிரப்பப்பட்டுள்ள தெனவும் ஆரம்ப நிலை 05 வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் அழைத்தல் மேற்கொள்ளப்பட்டது. |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல் பலகைகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அறிவித்தல் பலகை கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப் பட வேண்டும். | கணிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற 02 மருத்துவ நிலையங்களில் இருந்து பிரதேச சபைச் சட்டத்தின் 152(2) பிரிவின் பிரகாரம் வரி அறவீடு செய்திருக்கவில்லை. | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | உரிய நிறுவனங்களுக்கு அறிவித்திருந்ததுடன் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது சபையினால் அனுபவித்து வந்த 07 காணிகள், 20 மயானங்கள், 24 சனசமூக நிலையக் காணிகள் 10 கட்டிடங்கள் மற்றும் 04 வாகனங்களின் உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை. | சொத்துக்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்க வேண்டும். | காணியின் உரிமையை பெறுவதற்காக காணி ஆணையாளருக்கு மற்றும் பிரதேச செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளேன் |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 04 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 10,480,658 தொகையாகக் காணப்பட்டதுடன் அவை 28 சதவீதம் முதல் 69 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | சபையின் நிதி நிலைமை குறைவாகக் காணப்பட்டமையால் மத்திய அரசு அல்லது மாகாண சபையில் இருந்து பணம் கிடைக்கும் என்ற அடிப்படையில் மூலதன பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளது. பணம் கிடைக்காமையால் செலவுத் தலைப்புகளின் சேமிப்புக் காணப்பட்டது. |
| (ஆ) | 07 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 9,468,961 இற்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அவை 31 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | பணம் கிடைக்காமையால் செலவுத் தலைப்புகளில் சேமிப்புகள் காணப்பட்டது. |